பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 26 சனிக்கிழமை 09.03.2024 கதிர் 123

# வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரியை குழப்பிய பொலிஸார்

## ஆட்களை குண்டுக்கட்டாகத் தூக்கி எறிந்தனர்






வவுனியா மாவட்டம் வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஸ ஆகிய மூவரும் வியாழக்கிழமை நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். பஸில் ராஜபக்ச அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய உடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றத்து இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படாமல், இந்த சந்திப்பு நிறைவடைந்ததாகத் தகவல் தெளியாகியுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி தரப்பில் அவரது ஆலோசகர் சாகல ரத்நாயக்கவும் பங்கேற்றுள்ளார்.

தமது கட்சியின் கொள்கைகள் தொடர்பில் இதன்போது பஸில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுனவின்ஆணைக்கு அமையவே ஜனாதிபதியாக செயற்படுகிறார் எனவும், நாட்டைப் பிரிப்பதற்கு உடன்படாமல் ☞ 2

# மக்கள் ஆணை பெற்று மீண்டும் வருவோம்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

பொதுஜனபெரமுனமக்களாணையுடன் மீண்டும்பலமானஆட்சியைஉருவாக்கும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்நாமல்ராஜபக்சதெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் 2019ஆம் ஆண்டு பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில்கோட்டபய ராஜபக்ச தலைமையிலான ☞ 2

# பல லட்சம் மக்களுக்கு மத்தியில் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி

நாடு முழுவதும் சிவன் ஆலயங்களில் நேற்றுசிவராத்திரிநிகழ்வு பக்திபூர்வமாக இடம்பெற்றது. பஞ்ச ஈச்சரங்களில்ஒன்றான திருக்கேதீச்சரத்தில் பல லட்சக்கணக்கானஅடியவர்களின் அரோகரா ஒலிக்கு மத்தியில்இந்தநிகழ்வுகோலாகலமாக இடம்பெற்றது.

நாட்டின் புகழ்பெற்ற சிவாலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும்கூட சிவாரத்திரி நிகழ்வுகள் மிக பக்திபூர்வமாகஇடம்பெற்றன. மூன்று ஜாமப் பூசைகளும்இடம்பெற்றுமக்கள் இரவிரவாகவிழித்திருந்து சிவனைப் போற்றி வணங் கினர்.

சிவராத்திரி நிகழ்வுக்குப் பெயர் பெற்ற சிவாலயமான மன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில்சிவராத்திரி நிகழ்வுக்காக பல லட்சம் மக்கள் நேற்றுக் கூடியிருந்தனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பாலாவிக் கரையில் நீராடிதலையில்அபிசேக நீரைச் சுமந்துவந்து நீண்ட வரிசையில் நின்று அடியார்கள் சிவபெருமானுக்குத்தமது கைகளாலேயே ☞ 2

# கியூபத் தூதுவர் – அனுரகுமார நேற்று நேரில் சந்தித்து பேச்சு

இலங்கைக்கான கியூபத் தூதுவர் ஆன்ட்ரஸ் மார்கெலோ நேற்று தேசிய மக்கள் சக்தியின்தலைவர்அநுர குமாரதிஸாநாயக்கவைச் சந்தித்துப்பேசினார்.இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் கியூபத் தூதுவர் அலுவலகத்தின் பிரதான செயலாளரும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில்தேசியநிறைவேற்றுப்பேரவைஉறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டனர்.

இதன்போது நீண்ட காலமாக கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும்இடையில் இருந்த அரசியல் தொடர்புகள் பற்றியும் நிகழ்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகள் குறித்தும் விலாவரியாகக் கலந்துரையாடப்பட்டது.

நீண்ட காலத்துக்கு முன்பாககியூபாமீதுவிதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பற்றியும் இன்றளவில் கியூபாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள நேரடி தொடர்புகள் மற்றும் அவற்றின்முன்னேற்றம், பிரச்சினைக்குரிய பகுதிகள் பற்றியும் கியூபத் தூதுவர் அநுர குமார திசாநாயக்கவிடம் தெளிவுபடுத்தினார்.

# கோட்டாவை அகற்ற சதி என்பது பச்சைப் பொய் என்கிறார் சம்பிக்க

கோட்டாபய ராஜபக்சவை ஆட்சியில் இருந்துஅகற்றஉள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சதிகள் இடம்பெற்றதாக கோட்டாபயராஜபக்சபுத்தகம் எழுதுவது வெறும் பொய். பொருளாதார நெருக்கடிக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாதுஎன்றநிலைப்பாட்டை தோற்றுவிக்க கோட்டாபய ராஜபக்ச உட்பட ராஜபக்சக்கள் முயற்சிக்கிறார்கள்.

இவ்வாறு ஐக்கிய குடியரசுமுன்னணியின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாவல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மற்றும் சர்வதேச சதிகளினால் தான்ஜனாதிபதிபதவியில் இருந்துவெளியேற்றதாக கோட்டபய ராஜபக்ச குறிப்பிடுவது நகைப்புக்குரியது. கோட்டாவை பதவியில் இருந்து வெளியேற்ற ☞ 2

# கெஹலியவுக்கு எதிரான மற்றொரு வழக்கில் மார்ச் 26 நீதிமன்ற உத்தரவு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பிரதிவாதிகள் இருவருக்கு எதிரான வழக்கின் அடிப்படை ஆட்சேபனைகள் தொடர்பான உத்தரவு மார்ச் 26 ஆம் திகதி வழங்கப்படுமென கொழும்புமேல்நீதிமன்ற நீதிபதிதமித்தொட்டவத்த அறிவித்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல்ல வெகுசன ஊடக அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில், அவரது தனிப்பட்ட தொலைபேசி கட்டணப் பட்டியல் அமைச்சு ஊடாகச் செலுத்தப்பட்டமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் சுற்றுநிரூபத்திற்கு முரணாக, அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 2,30,984 ரூபா 45 சதம் நிதி, ☞ 2

# கல்விச் சீர்திருத்த நடவடிக்கையின் கீழ் நாட்டில் மேலும் 20 கல்வி வலயங்கள்

கல்விச்சீர்திருத்தநடவடிக்கைகளின்கீழ்நாட்டில் மேலும் 20 கல்வி வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன என்று கல்வி இராஜாங்க அமைச்சர்அரவிந்தகுமார் தெரிவித்தார்.

"தற்போதுநாடுமுழுவதும் சுமார் 100 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளன. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் கல்வித்துறையைமேலும் வலுப்படுத்தும் வகையில்வலயக்கல்விஅலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது"என்றார்அவர்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும்தெரிவித்ததாவது:

2024/2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட 'ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில்' திட்டம் பொருளாதாரச் சிரமங்களுக்குஉள்ளான பாடசாலைமாணவர்களின் கல்விநடவடிக்கைகளை வெற்றிகரமாகமுடிப்பதற்கு பெரும் ஆதரவை வழங்கும் என்பதைக் கூறவேண்டும்.ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் ஆலோசனைக்குஅமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

கல்வியில் திறமை காட்டினாலும்,கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழக்க,குடும்பவருமானம் இன்மைஒருகாரணமாக இருக்கக்கூடாது. எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கும்நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

கல்விச் சீர்திருத்தங்களில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். பாடசாலையில் தரம் 13 இல்நடைபெறும்கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் காலங்களில் தரம் 12 இல் நடத்தஎதிர்பார்த்துள்ளோம். மேலும், தற்போது தரம் 11 இல் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப்பரீட்சையை தரம் 10 இல் நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் ☞ 2

# ஆண், பெண் சமத்துவச் சட்டம் மே மாதம் நாடாளுமன்றம் வரும்

## ஜனாதிபதி அறிவிப்பு

ஆண், பெண் சமூக சமத்துவம் மற்றும்பெண்களைவலுவூட்டுவதற்கான சட்டமூலங்கள் இரண்டும் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பெண்களைவலுவூட்டுவதற்கான சட்டத்தின் பிரகாரம் தனியான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒற்றுமையை பாதுகாத்தல், தேசிய வளங்களை பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்உள்ளிட்டவற்றின் அடிப்படையிலேயே குறித்த ஆணை மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும் இந்தச் சந்திப்பில் ராஜபக்சக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

கட்சிக் கொள்கையுடன் ஒத்துப்போகாத எந்த விடயங்களுக்கும் இனிமேல் ஆதரவளிக்கப் போவதில்லைஎன்றநிலைப்பாட்டில் இருப்பதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தரப்பினர் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

தற்போதையநிலைமையினை எதிர்கொள்ளும் வகையில், சர்வதேச நிதி நிறுவனங்களின் தீர்மானங்களுக்கு அமைய தீர்மானங்களைஎடுக்கவேண்டியுள்ளதாக ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

சர்வதேசநாணய நிதியத்துடன் இணைந்து செயற்படும்போது, அரச தலைவர் என்ற வகையில், ஜனாதிபதி சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி இரு ராஜபக்சக்களும் வலியுறுத்தியுள்ளனர். .

எவ்வாறாயினும், தேர்தல் செயற்பாடுகள் அல்லது கூட்டணி அமைப்பது தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்படவில்லைஎன ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர் அதிகாரியொருவர் கூறினார். எதிர்காலத்திலும் தமது கட்சியின் செயற்பாடுகளை வெவ்வேறாக முன்னெடுப்பதற்கு இரண்டு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுக்கள்நேற்றிரவுபொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்டனர்.

பொலிஸாரின்நடவடிக்கையை எதிர்த்து ''ஓம் நமச்சிவாய'' மத்திரத்தை ஓங்கி உச்சரித்தபடி இருந்தவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றிய பொலிஸார் 8 பேரைக் கைது செய்து கொண்டு சென்றனர்என்றுஅங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி பூசைகளில் ஈடுபடுவதற்கு, ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளையின்படி வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால், ஆலயப் பூசகர் உட்பட இருவரை வியாழக்கிழமையே கைது செய்த பொலிஸார் சிவராத்திரி பூசையைத் தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

அதையும் தாண்டி அங்கு பூசைக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள்சிறீதரன், கஜேந்திரன் ஆகியோரும்பக்தர்களுடன்சென்று சிவராத்திரி தின பகல் பூசையில் கலந்துகொண்டிருந்தனர். காலைப் பூசைகளுக்குநேரடியானஇடையூறு ஏற்படுத்தாத பொலிஸார், மாலை 6 மணியளவில் அங்கிருந்த அனைவரையும் வெளியேறுமாறு பணித்தனர்.

சிவராத்திரி என்பது இரவு நேர வழிபாடுஎன்பதைப்பொலிஸாருக்கு அங்கிருந்தவர்கள் விளக்க முற்பட்டபோதும், அதனை ஏற்க மறுத்த பொலிஸார், சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டிடத்துக்குள் நுழைந்து பூசைப் பொருட்கள், அன்னதானத்திற்காகக் கொண்டு செல்லப்பட்டிருந்த பொருட்கள் என்பவற்றை அப்புறப்படுத்தி, அங்கு நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தினர்.

பொலிஸாரின் இந்த அத்த மீறல்களுக்கு அங்கு கூடியிருந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ''ஓம் நமச்சிவாய'' மந்திரத்தை உரக்கச் சொல்லியபடி பூசையைத் தொடர முற்பட்டனர். இதையடுத்து அங்கிருந்தவர்களை குண்டுக் கட்டாகத் தூக்கிசென்று அப்புறப் படுத்தினர். பெண்கள், சிறுவர்கள் உட்பட அனைவரும் இரவில் காட்டுப் பாதையூடாக வீடுகளுக்குத் திரும்புமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் பொலிஸாரால் தூக்கிச் செல்லப்பட்டு அங்கிருந்த அகற்றப்பட்டார்.

ஆலயத்திற்குச் செல்லும் பாதையில் காலையிலேயே பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். ஆலய வளாகத்திற்குள் குடி நீர் எடுத்துச் செல்ல இடையூறை ஏற்படுத்தினர் என்று பக்தர்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆலயத்திற்குகொண்டுவரப்பட்ட குடி நீர் தாங்கி பொலிசாரால் 3 கிலோமீற்றருக்கு முன்னரே தடுத்து நிறுத்தப்பட்டது. இதனையடுத்து குடிநீர்இன்றிஅவதிப்பட்டசிறுவர்கள், பக்தர்களுக்காக அருகில் உள்ள ஆற்றில் இருந்து நீர் பெற்ற போது அதனையும் பொலிசார் தடுத்தனர்.

இதனால் குடிதண்ணீர் இன்றி மக்கள் அவதிப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழரசுக் கட்சி மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன், மற்றும் ஆலய பக்தர்கள் குடிநீர் தாக்கியுடன் வந்த உழவுஇயந்திரத்தைஆலயத்திற்குள் விடுமாறுபொலிசாருடன்தர்க்கத்தல் ஈடுபட்டனர். சுமார்அரைமணிநேரம் குடிநீரைவிடுமாறு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து மாலை மூன்று மணியளவில் குடிதண்ணீரை வழங்க பொலிசார் இணங்கினர்.

அதன்பின்னர்குடிதண்ணீருடன் ஆலயத்தை நோக்கி வந்த உழவு இயந்திரம் காட்டுப் பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர்செல்வராஜாகஜேந்திரன் உள்ளிட்ட 3 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் நெடுங்கேணி வைத்தியசாலயில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அந்தக் குடிதண்ணீர்த் தாங்கியிலிருந்த தண்ணீர் முழுவதையும் மாலை 6 மணியளவில் தாங்கியிலிருந்துதிறந்துவெளியேற்றினார். (100)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவரும்சதிசெய்யவில்லை.ஏனெனில் சதி ஊடாகவே அவர் பதவிக்கு வந்தார்.

கோட்டபய ராஜபக்சவின் முட்டாள்தனமான நிர்வாகத்தினால் பெரும் விளைவுகளால் ஏற்பட்ட எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, மின்விநியோகதுண்டிப்பு ஆகியவற்றை பார்த்துக்கொண்டு மக்கள் கைகட்டிக்கொண்டு இருக்கமாட்டார்கள். நெருக்கடிகளை ஏற்படுத்திய கோட்டாபய ராஜபக்ச மக்களால் வெளியேற்றப்பட்டார் என்பதே உண்மை.

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால்தேசியபொருளாதாரம் பாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிடுவதை ஏற்க முடியாது. ஏனெனில், கொவிட்பெருந்தொற்றுஇலங்கையில் மாத்திரம்தாக்கம்செலுத்தவில்லை. இலங்கையைவிட பொருளாதாரப் பின்னடைவில் இருந்த நாடுகள் கொவிட் தாக்கத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தன. கொவிட் பெருந்தொற்று இரண்டாம் அலையை கோட்டபய ராஜபக்சதலைமையிலான ஆளும் தரப்பே தோற்றுவித்தது.

கொரோனா தடுப்பூசிகள் கொள்வனவு தாமதப்படுத்தப்பட்டு தம்மிக்க பாணிக்கு முன்னுரிமை வழங்கியமை, கொவிட் இறப்புக் களின் உண்மையான எண்ணிக்கையைமூடிமறைத்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

கோட்டபய ராஜபக்ச உட்பட ராஜபக்சக்கள் பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றம்தெளிவாககுறிப்பிட்டுள்ளது. ஆகவே கடந்த காலம் தொடர்பில் கோட்டபய ராஜபக்ச புத்தகம் எழுதுவது பயனற்றது என்றார்.

## கல்விச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதை மேலும் ஒரு வருடத்தினால் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதன்படி, தொழில்வாய்ப்புகளுக்காக விண்ணப்பிப்பதில் பட்டதாரிகளாகஇளம் வயதிலேயேபல்கலைக்கழகங்களை விட்டுவெளியேறுவதும்அவர்களுக்கு முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

முதலாம்தரத்திற்கு முன்னதாகவே சிறுகுழந்தைகளுக்கு வகுப்புகளைத் தொடங்கவும் தயாராக உள்ளோம். இன்றுபிறக்கும்குழந்தைகள்எதையும் மிக விரைவாகப் புரிந்துகொள்ளும் திறனைக் கொண்டுள்ளதை அடிப்படையாக வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் சுமார் 100 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளன. புதியகல்விச்சீர்திருத்தத்தின் மூலம் கல்வித் துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில் வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை120ஆகஅதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது பாடசாலைக் கல்வியின் தரத்திற்காக எடுக்கப்பட்ட முக்கிய முடிவுஎன்பதைகுறிப்பிடவேண்டும். பாடசாலைக் கல்விக்காகப் பல பாடசாலைஇணைந்துஒருகொத்தணிக் கல்வி முறையை அறிமுகப்படுத்த உள்ளோம்.

புதியகல்விச்சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர்கள்,அதிபர்களும்நியமிக்கப்பட உள்ளனர். தற்போதுள்ள அதிபர் தர வெற்றிடங்களுக்குத் தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவும் நாங்கள்எதிர்பார்த்துள்ளோம்என்றார்.

## கெஹலியவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசிகட்டணமாகசெலுத்தப்பட்டமை தொடர் பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதியான ரம்புக்வெல்ல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படக்கூடிய சுகாதார நிலைமையை கொண்டிருப்பாராயின், அவரைநீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி முந்தைய வழக்கு விசாரணையின் போது உத்தரவிட்டிருந்தார்.

அவர் நேற்றைய தினமும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதுடன், நாடாளுமன்ற விசேட அமர்வில் கலந்துகொள்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்று அவரது சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

## பல லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிசேகம் செய்து வழிபட்டனர்.

பல ஆலயங்களிலும் சிவராத்திரியை ஒட்டி, பக்தர்கள் விழித்திருக்க வசதியாகக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியைத் தோற்றுவித்தார்கள். 2019ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில்கொவிட்பெருந்தொற்று தாக்குதல்பூகோளமட்டத்தில்தாக்கம் செலுத்தியது.

கொவிட்பெருந்தொற்றுதாக்கத்தில் இருந்துநாட்டுமக்களைபாதுகாப்பற்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சமுன்னுரிமைவழங்கினார்.

பூகோள பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல, வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டதை தொடர்ந்து எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட் கொள்வனவில் பாதிப்பு ஏற்பட்டது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் விரக்தி நிலையை ஒரு தரப்பினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

தேசிய மற்றும் சர்வதேசத்தின் சூழ்ச்சிகளினால் தான் கோட்டபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சி வீழ்த்தப்பட்டது.

'அரகலய'வின் பின்னணி என்ன என்பதை மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். இடம்பெறவுள்ளதேசியதேர்தல்களில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை தலைமைத்துவமாகக் கொண்ட பலமான ஆட்சியை அமைப்போம்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க பொதுஜனபெரமுனவின்வேட்பாளர் என்பதுஅமைச்சுமற்றும்இராஜாங்க அமைச்சு பதவி வகிப்பவர்களின் நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல என்றார்.

## ஆண்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுநடைபெற்றசர்வதேசமகளிர் தின தேசிய கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேசமகளிர்தினத்தேசியகொண்டாட்டம்'அவளுக்கானபலம்-நாட்டுக்கான முன்னேற்றம்' என்ற தொனிப்பொருளில் பெருமையுடன் நடைபெற்றதுடன்,நாடளாவியரீதியில் இருந்து பெண்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான பெண்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் இருந்து பெறப்படும் நுண்நிதிக் கடன்களின் சுமையிலிருந்து விடுபடுவதற்காக வழங்கப்படும் 'லிய சவிய' கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிகழ்வும் அடையாளரீதியில்இங்குஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது அவர் தெரிவித்ததாவது: .

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுவது என்னும்போது, விழா நடத்துவதும், பெண்களின் உரிமைகள் பற்றி பேசிவிட்டு வீடு திரும்புவதும்தான் வழமையாக நடக்கிறது. இதுஒவ்வொருவருடமும் நடக்கும். ஆனால் இந்த முறை அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெண்களுக்காக குரல் எழுப்புவதை செயல்படுத்த முடிவுசெய்துள்ளோம்.

கடந்த ஆண்டு, நாடாளு மன்றத்தில், மகளிர் மன்றத்தை சந்தித்தபோது, பெண்களுக்குத் தேவையான சட்டமூலங்களைத் தயாரிக்கும்படி அவர்களிடம் கேட்டேன். அதில் இரண்டு முக்கிய சட்டமூலங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான் பெண்களைவலுவூட்டும்சட்டமூலம். அதற்காகத்தனி ஆணைக்குழுவை நியமிக்க எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்பின் விதிகளுக்கு உட்பட்டுபெண்களின்உரிமைகளைப் பாதுகாப்பதற்கானபொறிமுறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெண்களின் மேம்பாடு மற்றும் வலுவூட்டலுக்கான ஏற்பாடுகளைஇதுநோக்கமாகக்கொண்டுள்ளது. தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிக்கும்போது, அந்த விடயத்திற்குப்பொறுப்பானஅமைச்சரால் இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த வரைவு நேற்றைய தினம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது. மேலும், மற்றொரு வரைவு அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதுதான் ஆண்,பெண் சமூக சமத்துவச் சட்டமூலம்.

இதன் மூலம் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, தொழில்நுட்பக் கொள்கைகளைத்தயாரிக்கும்போது ஆண்,பெண் சமூக சமத்துவக் கொள்கைகளை நிறுவுதல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குகிறது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குரியஅதிகாரங்களுடன் ஆண்,பெண் சமூக சமத்துவம் தொடர்பான சபையொன்றை நிறுவுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும்,ஆண்,பெண்சமூகசமத்துவ மத்திய நிலையத்தை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் அந்த நிறுவனத்தின் மூலம் அமைச்சு மட்டத்தில் முன்வைக்கப்படும் பிரச்சினைகளையும்தீர்க்க முடியும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் செயல்படுத்தப் படும்போது, பெண்களுக்கான இரண்டு வலுவான நிறுவனங்கள் உருவாக்கப்படும். இப்போது பெண்களின் உரிமைகள் வெறும் பேச்சளவில்மாத்திரம்நின்றுவிடாது. அதற்குத் தேவையான சட்டங்கள் கொண்டு வர வேண்டும். பல ஆண்டுகளாக நாங்கள் அதைச் செய்யவில்லை. இன்று நாம் அந்தப் பணிகளைச் செய்கிறோம்.

இதைப் பற்றி ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடி மேலும் திருத்தங்கள் தேவைப்பட்டால் தெரிவிக்கநாடாளுமன்றத்தின்மகளிர் மன்றத்திற்கு பொறுப்பளிக்கிறேன். ஏப்ரல் புத்தாண்டு காலத்திற்குப் பிறகு அந்த திருத்தங்களை எமக்கு அறிவிக்க வேண்டும். மே மாதத்தில், இந்த இரண்டு சட்டமூலங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் இத்துடன் நிறைவடைவதில்லை. நாம் அறிமுகப்படுத்திய இந்த இரண்டு சட்டமூலங்களும் எமது பிராந்தியத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தெற்காசியாவில் வேறு எந்த நாட்டிலும் இதுபோன்ற சட்டங்கள் இருக்காது என்று நினைக்கிறேன்.

அதன் பிறகு ஆண், பெண் சமூக சமத்துவ அடிப்படையிலான வரவுசெலவுத் திட்டத்தை அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுஏற்கனவேதயாரிக்கப்பட்டுள்ளதுடன், திறைசேரி செயலாளருடன் கலந்தாலோசித்து வரைவை முன்வைப்போம் என நாம் எதிர்பார்க்கின்றோம். ஆசியாவிலேயே முதன்முறையாக இது நடைபெறுகிறது. கனடா உட்பட இரண்டு மூன்று நாடுகளில் மாத்திரமே இது நடைபெற்றுள்ளது.

நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத்தடுப்பது குறித்து அறிக்கை தயாரித்தேன். 2018 ஆம் ஆண்டில் இதனை நடைமுறைப்படுத்தத்திட்டமிட்டிருந்த போதிலும் எங்களால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. அதன் பின்னர், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலால், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.

நாடாளுமன்ற மகளிர் மன்றத்தை அழைத்து இதுபற்றிக் கலந்துரையாடி, மேலும்திருத்தங்கள் தேவைப்பட்டால் அதனுடன் இந்தச் சட்டத்தையும் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம். இதுவே பெண்களுக்காகநாங்கள்எடுத்துள்ள முதல்படி ஆகும். இதுமட்டுமின்றி இன்று தற்காலிக மகளிர் பராமரிப்பு மையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்களை முன்வைக்க ஏற்பாடு செய்துள்ளோம். - என்றார்.




# தடையைக் கடந்து வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி



ஸ்ரீலங்கா பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினரின் தடைகளை மீறி ஏராளமான பக்தர்களுடன்நேற்று(வெள்ளிக்கிழமை)வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடு பொலீஸாரால் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது அவைகளை மீறி வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

தடை உடைத்துச்சென்றதன் கோபம் காரணமாக அப்பகுதிக்குச் சென்ற ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கான நீர் விநியோகத்தை அறவே தடுத்து பொலிஸார் மனித நேயமற்ற அருவருக்கத்தக்க செயலை புரிந்தனர்.

எங்கே தண்ணீர் தாகத்தை போக்கி விடுவார்களே என எண்ணி ஐஸ்கிரீம் வியா பாரியைக்கூட விரட்டியுள்ளார்கள்.

இவர்களுடன் இணைந்து வாழ்வது கிஞ்சித்தும் சாத்தியமற்றது என்கின்ற ஓர்மத்தை ஒவ்வொரு தமிழனின் மனமும் சிவராத்திரி அன்று சிவனை வேண்டி நிற்கிறது.

குடிநீரை தடுத்து பச்சிளம் குழந்தைகளை யும் பக்தர்களையும் வதைத்த சிங்கள அதிகார பீடத்திற்கு தக்க தண்டனை கொடுப்பாய் எம்பெருமானே...





சிவனே போற்றி என மக்கள் வணங்கினர் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வேலன் சுவாமிகள் என பலரும் கலந்துகொண்டனர். (05-113)

## கிழக்கு ஆளுநர் செந்திலின் அழைப்பில் மகாதேவ தேசிக சுவாமிகள் பங்கேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமான்ஏற்பாட்டில் திருக்கோணேஸ்வரம்ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வில் மகாதேவ தேசிக சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்து கொண்டார்.

மகாதேவதேசிகசுவாமிகளின் தெய்வீக சொற்பொழிவு இடம்பெற்றது.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் கடந்த 02 ஆம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம்ஆலயத்தில் தொடர்சியாக தினமும் மாலை வேளையில் இடம்பெற்று வருகின்றன.



பெருந்திரளானபக்தர்கள்இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றனர். (05)





## பாடசாலையில் தேநீர் அருந்திய 6 ஆசிரியைகள் திடீர் சுகவீனம்

### பாணந்துறையில் சம்பவம்

பாணந்துறைபாடசாலைஒன்றில் தேநீர் அருந்திய ஆறு ஆசிரியைகள் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (வியாழக்கிழமை) பாடசாலை இடைவேளையின் போது குறித்த பெண் ஆசிரியைகள் தேநீர் அருந்தினர் எனவும், இதனால் ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சுகவீனமுற்ற 6 பெண் ஆசிரியைகள் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் எனவும், அவர்கள் குமட்டல், வாந்தி மற்றும் மயக்கம் போன்ற அறிகுறிகளால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

## மூன்று கிலோ 'ஐஸ்' சிக்கியது மட்டக்குளியவில் இருவர் கைது



3 கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறுகைதுசெய்யப்பட்டவர்கள் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்த 27 மற்றும் 31 வயதுடை யவர்களாவர்.

பொலிஸ் போதைப் பொருள்தடுப்புபிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தளை பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 3 கிலோ 336 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (05)

## இரண்டு மாத காலத்திற்குள் 112 சிறுமிகள் கருத்தரிப்பு

நாட்டில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துவரும் நிலையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 16 வயதுக்குட்பட்ட 112 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர் எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 2022 ஆம் ஆண்டில் 1,232 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ள நிலையில் 2023 ஆம் ஆண்டில் 1,497 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 168 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்களில் 16 வயதுக்குட்பட்ட 110 முதல் 112 வரையிலான சிறுமிகள் கருத்தரித்துள்ளனர்.

நீதிமன்றில் பதிவாகியுள்ள வழக்குகள் அடிப்படையில் 10 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளே அதிகளவில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகி வருவதாக தெரியவருகிறது.

இந்நிலையில், பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றவர்களில் சிலர் அவர்களது தண்டனை காலம் முடிவைந்த பின்னர் மீண்டும் சமூகத்திற்குள் வந்து அந்த தவறுகளை தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

ஆகவே இவ்வாறு தண்டனை பெற்று மீண்டும் சமூகத்திற்குள் வரும் நபர்களிடம் இருந்து சிறுமிகள் பாதுகாப்பாக இருக்கவேண்டும்எனவும்இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## 20 ஆண்டுக்கு முன் கொலை செய்த இருவருக்குத் தூக்குத் தண்டனை

20 ஆண்டுகளுக்கு முன்னர் பெலியத்த, கெடமான்ன பிரதேசத்தில் நபரொருவரை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவருக்கு தங்காலை உயர்நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) மரண தண்டனை விதித்துள்ளது.

இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கெடமான்ன பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய பியதிலக மற்றும் 38 வயதுடைய ருவன் தரங்க என்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களாவர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி பெலியத்த, கெடமான்ன பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவரை சுட்டுகொன்ற சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபரான பியதிலக பெலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நபரை வைத்தியசாலையில் சேர்க்க அழைத்துச் செல்லவிடாமல்இடையூறுசெய்ததாகக் கூறப்படும் ருவன் தரங்க என்ற சந்தேக நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறுஉயிரிழந்தவர்பியதிலக்க என்ற சந்தேக நபரின் மனைவியின் சகோதரனாவார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவர் மீதும் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் நேற்று (வியாழக்கிழமை) தங்காலை உயர் நீதிமன்றம் சந்தேக நபர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதித்துள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெருமைப்பட எதுவும் இல்லை

ஆண் பெண் சமத்துவச் சட்டமூலம் வைகாசி மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க. பங்குனி 8 பன்னாட்டு மகளிர் நாளில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவத்திருக்கிறார். அதுமட்டுமல்ல பெண்களை வலுவூட்டுவதற்கான மற்றொரு சட்டமும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அது வியாழக்கிழமை வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பெண்களை வலுவூட்டும் சட்டத்தின் மூலம் இதற்கெனத் தனி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. அதற்கூடாக பெண்கள் மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அரசமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறை இந்த ஆணைக்குழுவுக்கூடாகச் செயற்படுத்தப்படும். பெண்களின் மேம்பாடு மற்றும் வலுவூட்டலுக்கான ஏற்பாடுகளை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


ஆண், பெண் சமூக சமத்துவச் சட்டமூலம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது. சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, தொழில்நுட்பக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது ஆண், பெண் சமூக சமத்துவக் கொள்கைகளை நிறுவவும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் இந்தச் சட்டமூலம் வழி வகுக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரு சட்டங்களையும் கொண்டுவருவது பற்றி அரசுத் தலைவர் பெருமையாகவே கருத்துத் தெரிவித்தார். மகளிர் தினங்களில் மட்டும் உரிமைகள் பற்றி வெறுமனே பேசிவிட்டுப் போகாமல் அதை நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் தெரிவித்தார். "மகளிர் தினங்களில் விழா நடத்துவதும், பெண்களின் உரிமைகள் பற்றி பேசிவிட்டு வீடு திரும்புவதும்தான் வழமையாக நடக்கிறது. இது ஒவ்வொரு வருடமும் நடக்கும். ஆனால் இந்த முறை அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெண்களுக்காக குரல் எழுப்புவதை செயல்படுத்த முடிவு செய்துள்ளோம்" என்றார் அவர்.

உலகத்திற்கே முதலாவது பெண் தலைமை அமைச்சரைத் தந்த இலங்கையில் 60 ஆண்டுகள் கடந்துதான் ஆண், பெண் சமத்துவம் குறித்துச் சட்டமே இயற்றப்படுகின்றது என்பதில் பெருமைப்பட எதுவும் இல்லை. வெட்கப்படவும் வேதனைப்படவும் வேண்டிய செயல் இது. வேலைத் தளங்களிலும் வீடுகளிலும் மற்றைய இடங்களிலும் பெண்கள் சமத்துவமாக நடத்தப்படவில்லை என்பது அரசுத் தலைவருக்கு இப்போதுதான் உறைத்திருக்கின்றது என்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

52 சதவீதம் பெண்களைக் கொண்ட ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் அவர்களுக்கு 6 சதவீத இடங்கள்கூடக் கிடையாது. வளர்ந்துவரும் நாடுகள் பலவற்றிலும் காணப்படும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பதுகூட நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு இங்கு வழங்கப்படவில்லை. இதனை நிவர்த்தி செய்து பெண்களை வலுப்படுத்தி அவர்களைச் சமத்துவத்தோடு நடத்தியிருக்கவேண்டிய ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசியல்வாதிகள் அதனைச் செய்யாமல் இருந்ததற்காக வருத்தப்படுவதற்குப் பதில் ஏதோ பெரிய மனது பண்ணி இப்போதாவது ஆண் பெண் சமத்துவச் சட்டத்தைத் தாம் கொண்டுவருவது போன்று பேசுவது சரியானதும் அல்ல.

இப்போது சட்டத்தைக் கொண்டுவந்தால் அது முழுமையான அர்த்தத்தில் எப்போது நடைமுறைக்கு வரும் என்பதையும் சொல்ல முடியாது. இலங்கையின் வழக்கம் அது. இங்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உள்ளிட்ட பல சட்டங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. அதுபோன்றே இந்த ஆண் பெண் சமத்துவச் சட்டமும் எப்போது அதன் முழு அர்த்தத்தில் நடைமுறைக்கு வரும் என்பது தெரியாது. ஆனால், ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும் இணைந்து அதனை முழு வீச்சில் செய்வதற்கு உறுதியெடுக்கவேண்டும். இது விடயத்தில் பெண் அரசியல்வாதிகள் செயற்படுவதற்கு இன்னும் அதிகம் பணிகள் இருக்கின்றன. விழிப்புணர்வோடு இருப்பதே அவசியம்.




# செயற்கை நுண்ணறிவு வழிகாட்டியின் தேவை

தி.ஜெயராஜசேகர்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல்வேறு தரவுகளில் ஏதேனும் ஒரு வகை உள்ளீட்டுத் தரவுகளை மட்டுமே பயன்படுத்தி செயல்பாடுகளை செய்து வந்த நிலை மாறி, தற்போது பல்வேறு விதமான தரவுகளையும் ஆராய்ந்து கடினமான செயலையும் செய்யும் வகையில் பன்முக ஒப்புருக்கள் (மல்டி-மொடல்) நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்ட உரை வடிவூட்டத்தில் சிறந்த சாட் ஜிபிடி, கேள்விகளுக்கு விரிவாகப் பதிலளிப்பதில் சிறந்த பார்ட் மற்றும் மாறிய வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும் மற்றும் அடுத்த வாக்கியத்தை கணிக்கும் மாற்றிகள் வழியாக இருதிசை பிரதிநிதித்துவ குறியீடாக்கிகள் (பைடைரெக்சன் என்கோடர் ரெப்ரெசென்ட்டேஷன்ஸ் பிரம் ட்ரான்ஸ் பார்மர்ஸ் -பெர்ட்) போன்ற இயங்குதளங்கள் செயல்பட்டு வருகின்றன.

அதிக நன்மைகள் கொண்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அபாயங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், பன்முக ஒப்புருக்களின் வடிவமைப்பு, மேம்பாடு, பயன்பாடு ஆகியவற்றை நிர்வகிப்பதற்கு வெளிப்படையான தகவலுடன்கூடிய கொள்கைகள் தேவை என்றும் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

2024-ஆம் ஆண்டுக்கான உலகப் பொருளாதார நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்த அறிக்கை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உற்பத்தித்திறனை மேம்படுத்தினாலும் தொழிலாளர் சந்தையில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் நாடுகளுக்கு இடையில் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கக்கூடும் என்றும் கூறுகிறது. பெண்களின் வேலைவாய்ப்பில் பாதிப்பு ஏற்படுத்தும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அவர்களுக்கான ஊதிய இடைவெளியை விரிவுபடுத்தலாம் என ஐ.நா. அளித்த அறிக்கை எச்சரித்துள்ளது.

பெண்கள் அதிகம் பணிபுரியும் மனித உறவு மேம்பாட்டுத் துறைகளில் தன்னியக்கமாக்கல் (ஆட்டோமேஷன்) சாத்தியமற்ற நிலையில், அவர்கள் மிகுதியாகப் பணிபுரியும் அலுவலகப் பணிகள் செயற்கை நுண்ணறிவு கொண்டு தன்னியக்கமாக்க வாய்ப்புகள் அதிகம்.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றங்களை முழுமையாக அடைய எண்ம முறை (டிஜிட்டல்) கல்வி மற்றும் இணையத்திற்கான அணுகல் போன்ற உள்கட்டமைப்பு இடைவெளிகள் தடைகளாக உள்ளன.

இது உலக நாடுகளுக்கிடையே உற்பத்தித்திறன் மற்றும் வருவாய் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகிறது.

2024ஆம் ஆண்டுக்கான உலக பொருளாதார மன்றத்தின் (வேர்ல்ட் எகனாமிக் போரம்) உலகளாவிய இடர் அறிக்கையானது செயற்கை நுண்ணறிவு நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பொய்ச் செய்திகளை இடர்களாக அடையாளம் கண்டுள்ளது. ஊடக உள்ளடக்கத்தைத் திரித்துக் கையாளுதலும் ஆழமான போலிகளை (டீப் ஃபேக்) உருவாக்குதலும்




அடுத்த இரண்டாண்டுகள் இவ்வுலகைச் சூழ்ந்துள்ள அபாயங்களில் மிக முக்கியமானவைகளாக இருக்கும் என்று எச்சரிக்கிறது இந்த அறிக்கை.

அடுத்த 24 மாதங்களில் பல்வேறு நாடுகளில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் சுமார் 300 கோடி மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் நேரங்களில் உபயோகப்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு தேர்தலுக்குப் பின் அமையவுள்ள புதிய அரசுகளின் சட்டபூர்வத் தன்மையைக் குறைத்து மதிப்பிட ஏதுவாக அமையும் என்று கூறுகின்றனர் வல்லுநர்கள். 27 நாடுகளின் கூட்டு வாக்கெடுப்பைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்களில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் தாக்குதல்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.



செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப அமைப்புகளின் பாதுகாப்பையும் இந்த தொழில்நுட்பம் ஐரோப்பிய ஒன்றியத்தின் அடிப்படை உரிமைகளை மதிப்பதையும் உறுதிப்படுத்தும் நோக்கில் 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பச் சட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் நிறைவேற்றியது. செயற்கை நுண்ணறி தொழில்நுட்பம் மற்றும் பெரிய பன்முக ஒப்புருக்களுக்களை (மல்டி-மோடல் மாடல்) நிர்வகிக்கவும் அவற்றின் சுகாதாரப் பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்தும் உலக சுகாதார மையம் விரிவான வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.

நோயறிதல், மருத்துவப் பராமரிப்பு, நோயாளிகளின்

தொடர்ச்சி 5 ம் பக்கம்......

# நளீர் பவுண்டேசனின் முயற்சியால் 5ஆம் கிராமம் மெகா பாலர் பாடசாலைக் கட்டட திறப்பு விழா

(நூருல் ஹுதா உமர்)

நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள 5 ஆம் கிராமம் மெகா பாலர் பாடசாலை நிரந்த கட்டடமின்றி இயங்கிய நிலையில், நளீர் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான எம்.ஏ.நளீர் , ஆஸ்திரேலியாவிலுள்ள நண்பன் ஒருவரின் 07 லட்சம் ரூபா நிதி உதவியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலையினை திறந்து வைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.



மெகா பாலர் பாடசாலையின் அதிபர் ஏ.எஸ்.பிர்தௌஸியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு நாவிதன்வெளி பிரதேச செயலக



உதவி பிரதேச செயலாளர் பீ. பிரணவரூபன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.கௌரவ அதிதியாக நளீர் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின்பணிப்பாளர்சபைஉறுப்பினருமான எம்.ஏ.நளீர் அவர்களும், சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலக முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ரஜீவ்காந்த், கிராம அபிவிருத்தி உத்தியேகத்தர் எஸ்.சர்மிலராஜ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம். றிப்கான், ஸபூரியா ஜும் ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.பீ. சுபைதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல். றியாஸ், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பாலர் பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் நீண்டகாலமாகக் கட்டி முடிக்கப்படாமல் பற்றைக் காடாகக்கட்சியளித்தகட்டடத்தைநளீர்பவுண்டேசனின் ஸ்தாபக தலைவரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின்பணிப்பாளர்சபைஉறுப்பினருமான எம்.ஏ.நஸீரிடம் பாடசாலை நிர்வாகம் விடுத்த கோரிக்கைக்கமைய கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# செயற்கை நுண்ணறிவு...

4ம் பக்க தொடர்ச்சி......

கேள்விகளுக்கு பதிலளிப்பது போன்ற இனம், பண்பாடு, பாலினம், பாலின அடையாளம் அல்லது



செயல்பாடுகள், அறிகுறிகள் மற்றும் சிகிச்சைகள் குறித்து அறிந்து கொள்வதற்கான நோயாளிகளுக்கான வழிகாட்டி, மின்னணு மருத்துவப் பதிவேடுகளில் எழுத்து மற்றும் நிர்வாகப்பணிகளை மேற்கொள்ளும் செயல்பாடுகள், நோயாளி சந்திப்புடன் கூடிய மருத்துவ மற்றும் செவிலியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி என மருத்துவத் துறையில் பெரிய பன்முக ஒப்புருக்களுக்களுக்கானஐந்துமுக்கிய பயன்பாடுகளைவழிகாட்டுஆவணம் அடையாளபப்படுத்தியுள்ளது.

நம்பிக்கைக்குரிய பயன்பாடுகள் இருந்த போதிலும் உலக சுகாதாரமையத்தின் கூற்றுப்படி, தவறான, தவறிழைத் தோருக்கு ஆதரவான அறிக்கைகளை உருவாக்குதல் உட்பட பல ஆபத்துக்களை பெரிய பன்முக ஒப்புருக்கள் ஏற்படுத்தலாம். இந்த ஒப்புருக்க ளுக்கான மாதிரிகளைப் பயிற்று விப்பதற்கு பயன்படுத்தப்படும் தரவின் தரம், ஒருதலைச் சார்புச்சிக்கல்களுக்கு உள்ளாகலாம். வயது ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக்கூடும் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். பெரிய பன்முக ஒப்புருக்ககளின் அணுகுமை மற்றும் தாங்குமை பண்புகள் மற்றும் மருத்துவப் பாதுகாப்பில் 'தன்னியக்கமாக்கல்' சார்பு ஆபத்துகள் மருத்துவ வல்லுநர்களையும் நோயாளிகளையும் செயற்கை நுண்ணறிவு நுட்ப மருத்துவப் பிழைகளைப் புறக்கணிக்கச் செய்து விடலாம். நோயாளி தரும் தகவலின் முக்கியத்துவம் மற்றும் செயற்கை நுண்ணறி நெறிமுறையின் (அல்காரிதம்) நம்பகத்தன்மை அடிப்படையில் மின்வெளிப் பாதுகாப்பை (சைபர் செக்யூரிட்டி) உறுதிசெய்வது மற்றொரு முக்கியமான பிரச்சினையாகும். மருத்துவத்துறையைப் போன்று மற்ற துறைகளுக்கும் உலகளாவிய விரிவான செயற்கை நுண்ணறிவு நுட்ப வழிகாட்டுதல் வெளியிடப்படவேண்டியது அவசர அவசியம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Paneer & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1180/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் கிண்ணம் பிரயோக விஞ்ஞான பீடத்தின் வசமாகியுள்ளது!









(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், உபவேந்தர் கிண்ணத்துக்காக 10 அணிகளாக பிரிந்து தொடராக இடம்பெற்ற சுற்றுப்போட்டிகளில் விளையாடி இறுதி சுற்றுக்கு பிரயோக விஞ்ஞான பீட 'பல்கன்ஸ்' அணியும் தொழில்நுட்பவியல் பீட அணியும் தெரிவாகியிருந்தனர்.

நேற்று(வெள்ளிக்கிழமை)மிகவும்விறுவிறுப்பான நிலையில் இடம்பெற்ற 10 ஓவர்களைக் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிரயோக விஞ்ஞான பீட அணி ஐந்து விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தொழில்நுட்பவியல் பீட அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களை பெற்றது. இதன் அடிப்படையில் 70 மேலதிக ஓட்டங்களைப் பெற்று பிரயோக விஞ்ஞான பீட அணி 2023 கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உடற்கல்வி பிரிவின் பதில் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.எல். அப்துல் றவூப் அவர்களது தலைமையில் பிரயோக விஞ்ஞான பீட உடற்கல்வி போதனாசிரியர் ஐ.எம். கடாபி அவர்களது நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பதில் உபவேந்தரும் பொறியியல் பீட பீடாதியுமான பேராசிரியர் எம்.ஏ.எல். அப்துல் ஹலிம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாகவும் சுற்றுப்போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாகவும் பிரயோக விஞ்ஞான பீட அணியின் முன்னணி நாயகன் எஸ். ரொசாந்த் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வின்போது பீடாதிபதிகளான கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் அவர்களும் தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் அவர்களும் தென்கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள், உடற்கல்வி பிரிவின் உத்தியோகத்தர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மாணவர்கள் எனப் பலரும் பங்குகொண்டனர். (05)


## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City


கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்டச் செயலருக்கு நேற்றுப் பிரியாவிடை நிகழ்வு

யாழ் மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலராக கடமையாற்றி ஓய்வு நிலை பெற்று செல்லும் அம்பலவானர் சிவபாலசுந்தரனுக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரியாவிடை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்றிலில் இருந்து தமிழர்களின் பாரம்பரிய தமிழ் கலை வடிவங்களுடன் வரவேற்கப்பட்டு தொடர்ச்சியாக கடமையை உத்தியோகபூர்வமாக மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

தொடர்ந்து யாழ்.மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரியாவிடை நிகழ்வுகள் இடம்பெற்றது. இதன்பொழுது யாழ்.மாவட்ட செயலரின் நினைவுகளை தாங்கிய 'அருமருந்தென்ன' என்ற தலைப்பிலான இறுவட்டு மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலராகக் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்

தனது கடமைகளைப் பொறுப்பேற்ற மாவட்ட செயலர் 1992 மார்கழி மாதம் அரச சேவையில் இணைந்து கொண்டார். 1995 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளின் பொழுது யாழ்.மாவட்ட செயலர் அம்பலவானர் சிவபாலசுந்தரன், அவரது குடும்பத்தினர், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)







## மட்டக்களப்பில் வீடு ஒன்றில் குப்பைக்குள் கிடந்த குண்டு வெடித்து ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள வீடு ஒன்றில் குப்பைக்குள் இருந்து குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) பகல் 12 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் சம்பவதினமான நேற்று பகல் காணியை துப்புரவு செய்துள்ளார்.

பின்னர் குப்பைகளை தீயிட்டு எரித்தபோது கைக்குண்டு ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்து சிதறியுள்ளது. இந்நிலையில், வீட்டின் உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடப்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பொலிகண்டி இ.த.க. பாடசாலைக்கு விளையாட்டு உபகரணம் கையளிப்பு



ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர்களில் இங்கிலாந்தின் வசிப்போரின் ஒருங்கிணைந்த அமைப்பான ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் வடமராட்சிப் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

வடமராட்சி, பொலிகண்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக அந்தப் பாடசாலைக்குத் தேவையான ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகம் யூகே தலைவர் அருந்தவராஜா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இவர்களோடு ஹாட்லிக் கல்லூரி தாய்ச்சங்க தலைவர் முரளி, மற்றும் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் பிரகாசிக்கும் பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் பணிகள் ஊக்கமளிக்க ஏதுவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிராமங்களை நோக்கிய ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகம் யூகே முன்னோடியான செயற்பாடுகளின் தொடர்ச்சியாக இந்த இதுவம் இடம்பெற்றுள்ளது.

## சிறுகடைகள் வைத்து நடத்துவதற்கு பொருள்கள் இலவசமாக வழங்கல்







(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பகுதியில் இக்பால் நகர் கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப் பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு அவர்களின் சிறு தொழில்களை முன்னேற்றும் நோக்குடன் சிறுகடைகள் வைத்து நடத்துவதற்குத் தேவையான கடைக்குரிய சாமான்கள் இலவசமாக வாழ்வாதார உதவிகளாக வேள் விசன் நிறுவனத்தால் கடந்த வியாழக் கிழமை மாலை இக்பால் நகரில் வைத்து உரிய பயனாளிகளிடம் வழங்கிவைக்கப்பட்டன. (05)

## 59 வயதான தாய் துஷ்பிரயோகம் 20 வயது மகன் பொலிஸால் கைது

59 வயது தாயை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 20 வயது இளைஞர் ஒருவர் புதன்கிழமை களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 20 வயதுடைய களுத்துறை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

இவர் கடந்த 4 ஆம் திகதி தனது தாயை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட தாய் சுகவீனமடைந்து ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் சம்பவத்தின் போது அவர் போதையில் இருந்துள்ளதாகவும் அவருக்கு எதுவும் நினைவில்லை எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தின் கிண்ணியாவில் தென்னைகளில் வெண்ணிற ஈ தாக்கம்

(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அண்மை காலமாக தென்னை மரங்களிலும் வாழை பூச்செடிகளிலும்வெண்ணிற ஈக்களின்தாக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது அதிகமாக கிண்ணியா பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட பெரியாற்றுமுனை ஆலங்கேணி ரஹ்மானிய நகர், கட்டையாறு முதலான பிரதேசங்களில் தென்னை மரங்களில் வெண்ணிற ஈ காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது தென்னை மரங்களில் உள்ள தேங்காய் முதலானவற்றின் வளர்ச்சி குறைவடைந்து காணப்படுவதாகக் கூறுகின்றனர்.

தேங்காய் சுருங்கி சிறிய அளவில் காணப்படுவதாகவும் கூறுகின்றனர்.

உற்பத்தி செய்ய முடியாத அளவுக்கு குறைந்துள்ளதாகஅவர்கள்தெரிவிக்கின்றனர்.

இதனைக்கட்டுப்படுத்துவதற்குசவர்க்காரத் தூளை கரைத்து விசிறிய போதிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை எனக் கூறிகொண்டனர்.

தென்னைமரங்களில்எல்லாஇடங்களிலும் பரவி இது காணப்படுவதாகவும் வெண்ணிற பூச்சிகள் இதற்குதாக்கத்தைஏற்படுத்துதாகவும் கூறுகின்றனர்.

தென்னை மரங்கள் வாழை மரங்கள் பூச்செடிகளிலும் இவை காணப்படுகின்றன.

தென்னை மரங்களிலிருந்து வீட்டு தேவைக்காக நாங்கள் ஏற்கனவே பறித்திருந்தோம் ஆனால் இந்த வெண்ணிற ஈக்கள் வந்ததுக்கு பிறகு எங்களுடைய நிலைமை மாறிவிட்டது.

இதனைமுற்றாகஒழித்தால்மக்களுடைய வாழ்வாதாரம் வசதியாக அமையும் இல்லையென்றால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பெரிதும் பாதிக்கப்படும்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லை யென்றால் மக்களின் பொருளாதாரம் இதனால் பாதிக்கப்படும்.(05)



# சம்மாந்துறையில் மு.காவின் இளைஞர் நிகழ்ச்சி நிறுத்தம்

## கட்சித் தலைமை அறிவிப்பு

(கே எ ஹமீட்)

சம்மாந்துறையில் இன்று (சனிக்கிழமை); நடைபெற திட்டமிடப்பட்டுள்ள இளைஞர் நிகழ்ச்சிகளை நிறுத்துவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அறிவித்துள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் நேற்று ஸ்ரீ லங்கா மு.காங்கிரஸ் கட்சியின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர் தலைமையிலான குழுவினர் விளக்கினர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

சம்மாந்துறையில் இன்று (சனிக்கிழமை) நடைபெற திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் சில புரிதல் குறைபாடுகள் காணப்படுவதால் இதனை தற்போதைக்கு உடன்நிறுத்துமாறு வேண்டுவதுடன் இது தொடர்பான விடயங்களையும் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். குறித்த தினத்தில் நடைபெறவிருக்கும்நிகழ்ச்சிபற்றிஎன்னிடம்எவ்வித அனுமதியும் பெற்றிருக்கவில்லை. அதற்கு நான் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் வாக்குறுதியை வழங்கவுமில்லை.

சகோதரர் அல் ஹாபிழ் ஹாதிக் இப்ராஹீம் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை செவியுற்றுகடல்கடந்தநாட்டில்உள்ளவாறேஅவரிடம் தொடர்புகொண்டுஇத்தகையநிகழ்ச்சிகளைதற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்சிக் கட்டமைப்பு மறுசீரமைத்தல்நிகழ்ச்சித்திட்டம்நிறைவுறும்வரை தாமதிக்குமாறு தலைவராகிய நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன். அதற்கிணங்க அவரும் அதனை ஏற்றுக்கொண்டு குறித்த நிகழ்ச்சியை தாமதித்து நடத்த தன்னுடைய இணக்கத்தையும் தெரிவித்திருந்தார். பின்னர் அதனை மீறி இத்தகைய ஒரு நிகழ்ச்சியை திட்டமிட்டிருப்பது எனக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்ச்சி குறித்த தினத்தில் நடைபெறுவதாகவும் நான்அதில்பிரதமஅதிதியாகக்கலந்துகொள்வதாகவும் சமூக வலைத்தளங்களிலும் ஆடம்பரமான சுவரொட்டிகளிலும், அழைப்பிதல்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருப்பதை கேள்வியுற்று நான் மிகவும் மனவருத்தம் அடைகின்றேன்.

கட்சிக் கட்டமைப்பு மீளுருவாக்கம் அம்பாறை மாவட்டத்தில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இந்த நிகழ்ச்சி எனது வேண்டுகோளையும் மீறி நடத்தப்படுவதால் நான் குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாது என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் கூற விரும்புகின்றேன்.

அதனால் இந்த நிகழ்ச்சியை கட்டமைப்பு மீளுருவாக்கம் முவடியும்வரை தாமதிக்குமாறு ஹாதிக்குக்கு மீண்டும் அன்புடன் அறிவுறுத்த விரும்புகின்றேன் என்று கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவுப் ஹக்கீம் தெரிவித்துள்ளார் என்று அவர் தெரிவித்தார். குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் மாகாண சபை அமைச்சரும், பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# மதுவரி ஆணையாளராக தர்மசீலன் கடமையேற்பு



இலங்கை மதுவரித் திணைக் களத்தின் மதுவரி ஆணையாளராக(ஆதாயம்) கனகசபைதர்மசீலன் கடமையேற்றுள்ளார்.

மதுவரித்திணைக்களத்தில்மதுவரி பரிசோதகராக 1986 இல் இணைந்து பணியாற்றினார். தொடர்ந்து அத்தியட்சகர், உதவி ஆணையாளர், ஆகிய பதவி உயர்வடைந்து பின் திணைக்கள தலைமையகத்தில் பிரதி மதுவரி ஆணையாளராகக் கடமையாற்றினார்.

இறுதியாகமதுவரிஆணையாளராக கடமையாற்றிய கனகசபைதர்மசீலன் மதுவரி ஆணையாளராக(ஆதாயம்) கடந்த வாரம் கடமையேற்றுள்ளார்.

இந்த வருடம் இறுதிப்பகுதியில் இவர் ஒய்வுபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# ‘ஹோப்’ பிராந்திய அலுவலகம் திருமலையில் திறந்து வைப்பு





வன்னி ஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம் இன்று வன்னி ஹோப் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சன் சிவஞானசுந்தரம் தலைமையில் இன்று திருகோணமலையில் திறந்து வைப்பு

வன்னி ஹோப் நிறுவனத்தினுடைய செயற்பாடுகளை மேலும் கிழக்கு மாகாண பூராகவும் விஸ்தரிக்கும்நோக்குடன்கிழக்கு மாகாணத்திற்கான அலுவலகம் நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலை மாவட்டத்தில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

வன்னிஹோப்நிறுவனம்பல்வேறு வகையான மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களையும் இன மத மொழி பிரதேச வேறுபாடின்றி நாட்டின் வடக்கு கிழக்கு மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் முன்னெடுத்து வருகின்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சன் சிவஞானசுந்தரமும் சிறப்பு அதிதிகளாகஜஎம்எச்ஓநிறுவனத்தின்இலங்கைக்கான பணிப்பாளர் ராதா கிருஷ்ணனும் திருமதி ஜிவிதன் சுகந்தினி நிலையப் பொறுப்பதிகாரி - கிழக்கு மாகாணம் தொழிற் பயிற்சி நிலையம்

சமூகசேவைகள்திணைக்களம்,இலங்கைக்கான பணிப்பாளர் முரளிதரன் வன்னி ஹோப் நிறுவனத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் பயனாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# திருகோணமலைச் சிறைச்சாலையில் சர்வதேச மகளிர்தின கொண்டாட்டம்

(எப்.முபாரக்)

திருகோணமலை சிறைச்சாலையில் சர்வதேச மகளீர் தினத் தினை முன்னிட்டு மகளீர் தின கொண்டாட்டம் திருகோணமலை



சிறைச்சாலை அத்தியட்சகர் கனீஷ் பிரேமவங்க தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

சிறைச்சாலைகள் ஐக்கியம் அமைப்பின்ஏற்பாட்டில்நடைபெற்றது.

திருகோணமலை சிறைச்சாலையில் உள்ள அனைத்து கைதிகளுக்கும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டதோடு பெண்களின் முக்கியத்துவம் தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சிறைச்சாலையின் அத்தியட்சகர், பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராசா, சிறைச்சாலை ஐக்கிய ஒன்றிய உறுப்பினர்கள், புனர்வாழ்வு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள். (05)

## ஆதி சிவனாலயத்தில் சிவராத்திரி நிகழ்வு







(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுஆதிசிவன்ஆலயத்தில் மகாசிவராத்திரிவிரதத்தைமுன்னிட்டு நேற்று(வெள்ளிக்கிழமை) காலை பூஜை வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பிரதேச செயலகம் இந்து கலா சார அலுவல்கள் திணைக்களம் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்தது.

மாணவரிடையேகுருத்தோலை பின்னுதல், நிறைமுட்டிவைத்தல், கோலம்போடுதல்போன்றபாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளில் போட்டி இடம்பெற்றது.

அறநெறி பாடசாலை மாணவர் களின் கலை நிகழ்வுகளும் நடை பெற்றன. (05)

## காட்டு யானை தாக்கியதில் சிவபுரத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி ஜெயபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கிறாஞ்சி சிவபுரம் பகுதியில் வியாழக்கிழமை இரவு 11.30 மணியலவில் காட்டு யானை கூட்டம் ஒன்று தனிமையில் இருந்த 50வயது மதிக்கத்தக்க ஒருவரை யானைதாக்கியதில் படுகாயம் அடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுஅங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக பாதிக்கப்பட்டவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பந்தப்பட்ட பகுதிக்குசென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



# கல்குடா யங்ஸ்டார் விளையாட்டுக் கழக மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள்



(நூருல் ஹுதா உமர்)

கல்குடா யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் மூன்றாவதுஆண்டுப்பூர்த்தியைமுன்னிட்டு இடம்பெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடரின் இறுதிப்போட்டிகள் கடந்த திங்கட்கிழமை ஓட்டமாவடி பொது விளையாட்டுமைதானத்தில்இடம்பெற்றது.

இச்சுற்றுத்தொடரின்ஆரம்பப்போட்டிகள் கடந்த 26.02.2024 ஆம் திகதி தொடங்கி இரு நாள்கள் லீக் போட்டிகளும் தொடர்ந்து 3 ஆவது நாள் காலிறுதி ஆட்டங்கள் இடம்பெற்ற நிலையில், அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்குடா யங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ஐ.எம்.றிஸ்விமற்றும்செயலாளர்ஏ.எல்.எம். சதாம் ஆகியோரின் தலைமையில் உப தலைவர் எம்.ஐ.எம்.றமீஸ்மற்றும்கழகநிருவாகிகளின்ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இவ்விறுதிப்போட்டிகளில் செம்மணோடை சாட்டோ அணியினரும் மீராவோடை இளம்பிறை அணியினரும் பங்குபற்றியதோடு இதில் அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் கலாநிதி எம்.எல்.எம் ஏ. ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் கல்குடா தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான், அஷ்ஷெய்ஹ் ஹாரூன்(ஸஹ்வி), அல்ஹாஜ் நியாஸ்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில்அரையிறுதிகளை வென்ற மீராவோடை இளம் பிறை மற்றும்செம்மண்ணோடைசாட்டோ ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் 4 ஓட்டங்களால் வெற்றி பெற்று மீராவோடை இளம்பிறை அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

குறித்த சுற்றுத்தொடரில் 32 இற்கும் மேற்பட்ட பிரதேசத்தின் முன்னணிக்கழகங்களின் கிரிக்கெட் அணிகள் பங்கு கொண்டிருந்தன.



வெற்றி பெற்ற அணிக்கான வெற்றிக்கின்னம் மற்றும் பணப்பரிசினை சட்டத்தரணி ஹபீப் றிபான் மற்றும் அகீல் அவசர உதவிச் சேவை பனிப்பாளர் நியாஸ் ஹாஜியார், தே டைம் ரெவல்ஸ் பணிப்பாளர் ஐ. எம் றிகாஸ் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இச்சுற்றுத்தொடரை வெற்றிகரமாக கொண்டு நடத்துவதில்மிகஅர்ப்பணிப்புடன்செயற்பட்டஅணியின் செயலாளர் பலரது பாராட்டையும் பெற்றிருந்தார்.(05)

# லெஜெண்ட்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம்-2024 சம்பியனானது அட்டாளைச்சேனை சோபர்




கல்முனை லெஜெண்ட்ஸ் விளையாட்டுக் கழக 15 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில்இரண்டாம்கட்டமாக நடைபெற்ற 'லெஜெண்ட்ஸ் சம்பியன்ஸ்கிண்ணம்-2024'மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியன் கிண்ணத்தையும், 50 ஆயிரம் பண பரிசையும் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக்கழகம் தனதாக்கி கொண்டது.

கல்முனை லெஜெண்ட்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாகியும், கல்முனைபிரதேசஇளைஞர்சேவை அதிகாரியுமான ஏ.எல்.எம்.அஷீம் அவர்களின் நெறிப்படுத்தலில் கல்முனை லெஜெண்ட்ஸ் விளையாட்டுக் கழக தலைவர் எம்.எம். ஜமால்தீன் தலைமையில் இரு நாள்களாக நடைபெற்ற இந்த போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 24 அணிகள் பங்குபற்றி இறுதியாட்டத்திற்கு அக்கரைப்பற்று டீன்ஸ்டார்விளையாட்டுக்கழகமும், அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக்கழகமும் தெரிவாகின. இதில் இரண்டாம் இடத்தை தனதாக்கிய அக்கரைப் பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினருக்கு 25 ஆயிரம் பணப்பரிசும், கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இறுதி நாள் நிகழ்வில் அக்கரைப்பற்று அனைத்து பள்ளி வாசல்களின்முன்னாள்தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம். சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் கிழக்கு மாகாண கூட்டுறவுஊழியர்கள்ஆணைக்குழு பணிப்பாளரும், கிழக்கின் கேடயம் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி பீ.எம். றியாத், பிர்லியண்ட் விளையாட்டுக்கழகதலைவர்எம்.எஸ்.எம். பழீல், கல்முனை லெஜெண்ட்ஸ் விளையாட்டுக்கழக உப தலைவர் எம்.ஏ. கரீம், அனுசரணையாளர்கள், கழக வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# ஹெல்பிங் ஹண்ட்ஸ் சமூக சேவை நிறுவன உறுப்பினர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறி





(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை ஹெல்பிங் ஹண்ட்ஸ்சமூகசேவைநிறுவனத்தின்உறுப்பினர்களுக்கு முதலுதவி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளைமேற்கொண்டுவரும்ஹெல்பிங் ஹண்ட்ஸ் நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு முதலுதவி பயிற்சிகளை வழங்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கல்முனைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூரண ஒத்துழைப்புடன் உதவும் கரங்கள் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலுதவி பயிற்சி செயலமர்வு அண்மையில் மருதமுனை பொது நூலகக்கட்டடத்தில் இடம்பெற்றது.

உதவும் கரங்கள் சமூக சேவை நிறுவனம் மற்றும் மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவருமான எம்.ஐ.எம்.முஹர்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌசாத் மற்றும் தொற்றா நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

இதன்போது குறித்த நிறுவனத்தின் சார்பில் 40 பேர் கலந்துகொண்டதுடன் கலந்துகொண்ட சகலருக்கும் சான்றுதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# அக்கரைப்பற்று இராமகிருஸ்ண மிசன் வித்தி இல்ல மெய்வன்மை விளையாட்டு போட்டிகள்




(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்றுஇராமகிருஸ்ண மிசன்மகாவித்தியாலயத்தின்இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டிகள்வியாழக்கிழமைகாலை ஆரம்பமாகின.

பாடசாலையின் அதிபர் திருமதி ரவிலேகா நித்தியானந்தன் தலைமையில் பிரதி அதிபர் கப்டன் க.ஜனார்தன், உதவி அதிபர் ந.நேசராஜா ஒருங்கிணைப்பில் உடற்கல்வி ஆசிரியர் திருமதி எஸ்.கண்ணதாசன் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே.ராமிலன் ஆகியோரின் வழிநடத்தலில் இடம்பெற்ற போட்டிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஆண்களுக்கான மரதன் ஓட்ட போட்டி நிகழ்வோடு ஆரம்பமான விளையாட்டு நிகழ்வில்முல்லை,மருதம்,நெய்தல் ஆகிய இல்லங்களை சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர். பாடசாலை முன்பாக இருந்து ஆரம்பமாகி பனங்காட்டை சென்றடைந்த வீரர்கள் அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர்.



தொடர்ந்து பெண்களுக்கான சைக்கிளோட்டத்திலும் உற்சாகமாக பங்கேற்றவீராங்கணைகள் குறித்த தூரத்தை மிக வேகமாக ஓடி இலக்கை அடைந்து கொண்டனர்.



இதேநேரம் எதிர்வரும் 22 ஆம் திகதி அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் இறுதிப்போட்டிகள் மிகப்பிரமாண்டமான முறையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.2024இல் வெளியிடப்பெற்றது.